9. அறிவிப்பு.

*நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, **1994** (ஆ.செ.)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

(ஊ) நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்தல்—தொடர்ச்சி. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

" 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்," எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-5-1994) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.